முருகப்பெருமான் துணை
முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
**பாகம்: 715**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

13.09.2021, திங்கட்கிழமை

1. பிரணவ சக்தியே அரங்கா வாழ்க
பிரணவ சித்தியே தேசிகா வாழ்க
தரணியை காத்திட எந்தன் அவதாரமாக
தவசியாக வந்து பிறந்த அரங்கனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஊழ் வெல்லும் மகா சக்தி கொண்ட அரங்கனே
உலகை காக்க வந்த ஞான தேசிகனே
3. தேசிகனே உன் தர்மம் உலகை காக்கும்
தேசிகனே உன் சன்மார்க்கம் இந்த உலகை மீட்கும்
ஆசி தந்து ஆறுமுகன் என் துணை இருக்க
அரங்கன் சொல் செயல்கள் அனைத்தும் அகிலத்தை காக்கும் வேதமாக மாறும்
4. மாறுதலை தந்து அரங்கனோடு யான்
மகா சூட்சுமமாய் நிரம்பி இருப்பதாலே
ஆறுதல் தேடி வரும் மக்களுக்கெல்லாம்
அரங்கன் குடிலில் அபயமென எல்லா வளமும் கிட்ட நேரும்
5. நேர்மைகொண்டு அரங்கன் தர்மத்தை
நிலவுலகில் வளர்க்கும் மக்களெல்லாம்
பெருமைபட ஞானவான்களாக மாறி
பேருலகமாற்றத்தில் இடம்பெறக்கூடும்
6. கூடவே அரங்கன் நாமஜெபத்தை
குறையில்லா நித்தம் உலகோர் செய்துகொண்டு ஜெபதபம் செய்துகொண்டு வர
ஈடேறும் அவர்கள் பிறவி பெரும் பயனோடு
இணையில்லாத பிறவாபெரும் பேறு உறுதியாகும்
7. ஈடேறும் ஞானவான்கள் ஆசி துணையோடு
இந்த உலகில் ஞானிகளாகும் வாய்ப்பும் கிட்ட நேரும்
நேர்மைகொண்டு அரங்கனை தொடரதொடரவே
நிலவுலகோர்க்கு ஞானவான்களெனும் பதவியோகம் கூடி

8. பேருலகை பேரிடரில் இருந்து மீட்கும்
பெருந்தன்மை சக்தி வரங்கள் கூடி
கூடியே உலகோர் ஞானிகளாவர்
குருராஜன் உன் தயவால்

9. இந்த உலகமே ஞான உலகமாகி
ஆகியே கலியுகம் மாற்றம்
ஆறுமுகன் தலைமையில் ஆன
ஞானயுகமாக உருவெடுக்கக் கூடும்

10. கூடவே தொடர்ந்து அரங்கனை
குறையில்லா மக்கள் வணங்கி வருக வருக
சுடரேற்றி நாமஜெபம் தொடர்ந்து
செய்து வருக வருக

11. வருகவே உலகோர்க்கு ஞான சித்தி
வல்லமையான ஜீவ முக்தி
முருகப்பெருமான் என் தயவாய்
கிட்டி மாற்றம் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–